தஞ்சாவூர் S. கலியாணராமன்

14, விச்வநாதன் தெரு,
ஸ்ரீனிவாஸா அவின்யு,
மதறாஸ் - 28.
30-5-1983

இவ்வரிய ஸங்கீதத் தொகுப்பை வெளியிடும் ஸ்ரீமதி பட்டம்மாள் தண்டபாணி அவர்களைப் பல வருஷங்களாக நான் அறிவேன். இவருக்குக் கர்னாடக சங்கீதத்தில் உள்ள ஈடுபாடு வியக்கத்தக்கதாகும். ராகங்களிலும், ஸ்வரங்களிலும், தாளங்களிலும், இவருக்குள்ள அபார ஞானம் இவர் க்ருதிகளில் தெள்ளெனத் தெரிகின்றது. ராகங்களின் ஸ்வரூபங்களை பாமர ரஞ்சகத்துடன், பரிபூர்ணமாகத் தன் வித்வத்தைக் காட்டும் அதிசயிக்கத் தக்க திறமையுள்ளவர். இவர் ஒரு வீணை வித்யாம்ஸினி, வீணையின் மூலமாகவும், வாய்ப்பாட்டின் மூலமாகவும், மிகக்கடினமான, அபூர்வ ராகங்களின் ஸ்வரூபங்கள், அயராத உழைப்பினாலும், ஞான பலத்தாலும், வெளிவரும் இவரது பாங்கு போற்றற்குரியது.

இவர் ஏற்கெனவே அனேக கீர்த்தனைகளை இயற்றியவர். 72 மேளகர்த்தா ராகங்களிலும், கீர்த்தனைகள் இயற்றி, புத்தகமாக முன்பே வெளியிட்டு, இத்துறையில் புகழ் பெற்ற ஸாஹித்ய கர்த்தாக்களின் வரிசையில், அழியாத இடம் பெற்றுள்ளார். இவரது மேளகாத்தா கீர்த்தனைகள், பலவற்றின் அமைப்பு, என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது. மேலும் வழக்கத்தில் உள்ளதும், அல்லாததுமான, அநோகமாக எல்லா ஜன்ய ராகங்களிலும், பாடல்களை இயற்றியுள்ளார். இவற்றில் இவரது ஆற்றலும், ஞானமும், தனிமுத்திரையோடு பிரகாசிக்கின்றன.

ஒரு முறை இவர் 72 மேளகர்த்தா கீர்த்தனைகளின் புத்தக வெளியீட்டின் போது, நான் சொன்ன அபிப்ராயங்களைத் தீவிரமாக மனத்தில் கொண்டு பஞ்சமவர்ஜ, இருமத்யம் ராகங்களிலும் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். இவற்றில் சிலவற்றின் ஸ்வரூபத்தை பிரகாசிக்கச் செய்ய வேண்டி

என்னிடம் அளித்தார். இந்த பஞ்சமவர்ஜ, இருமத்திம ராகங்கள் வடநாட்டு சங்கீதத்தில், கையாளப்பட்டு பிரசித்தி அடைந்த போதிலும், தென்னாட்டில், யாரும் கையாண்டதாகத் தெரியவில்லை.

இந்த ராகங்களின் ஸ்ரூபங்களை வெளிபடுத்துவது ஒரு மிகக் கடினமான ஸாதனையாகும். தொடக்கத்தில் இந்த ராக ஸ்வரூபங்களின் தனித்தன்மை எளிதில் புலப்படாது. எனினும் இவற்றில் தீவிரமாக ஈடுபட்டு இவற்றிக்கும் தனி ஸ்வரூபங்கள் உண்டு. அதில் ரக்தியை உண்டாக்க முடியும் என்பதை உணர்ந்த பின்னரே இந்த மெட்டுக்களை அமைக்க முன் வந்தேன். இப்புதிய முயற்சியில் ஸ்ரீமதி பட்டம்மாளின் உழைப்பும், ஆராய்ச்சியும், கர்னாடக சங்கீதத்திற்கு ஒரு அரிய பெரிய வாய்ப்பை ஏற்படுத்திருக்கிறது என்பது என் நம்பிக்கை.

ஸங்கீதமெனும் ஸாகரத்தில் எத்தனையோ பட்டை தீட்டாத வைரங்களும், ரத்தினங்களும் உள்ளன. அவைகளைத் தேடிக் கண்டு பிடித்து பட்டை திட்டி, அவற்றிற்குரிய, மதிப்பையளிக்கும் வாய்ப்பில் இவ்வம்மை யாரும், இவரது முயற்சிகளுக்கு, பரிபூர்ண ஆதரவு தந்து புத்தக வடிவமாக வருவதற்கு அரும்பாடுபடும் அவரது கணவர் ஸ்ரீ தண்டபாணி அவர்களும் நிண்ட காலம் வாழ்ந்து, மேலும் மேலும் ஸங்கீதத்திற்கு தொண்டு செய்யும் பேற்றை ஆண்டவன் அருளப் பிரார்த்திக்கின்றேன்.

தஞ்சாவூர் **S. கலியாணராமன்**
ஸங்கீத வித்வான்